TAMILTH Salem 1 Regional_01 Prabakaran P 215427 HT82175

சின்ன சின்னதாய்

ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த 49-வது பட்டமளிப்பு விழாவில், உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ப.சதாசிவம் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

ஈரோடு கலை அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

■ ஈரோடு

ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 49–வது பட்டமளிப்பு விழா, முதலியார் கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.ராஜமாணிக்கம் தலைமையில் நடந்தது. கல்வி நிறுவன செயலர் மற்றும் தாளாளர் கே.கே.பாலுசாமி முன்னிலை வகித்து நிகழ்வை தொடங்கி வைத்தார். முதல்வர் சங்கரசுப்பிரமணியன் வரவேற்புரை வழங்கினார்.

விழாவில், உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ப.சதாசிவம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, 1,064 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கினார். மேலும், இளநிலை மாணவர்கள் 22 பேருக்கும், முதுநிலை மாணவர்கள் 9 பேருக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கி ப.சதாசிவம் பேசியதாவது:

இன்றைய மாணவர்கள் நமது நாட்டின் எதிர் காலத்தை வலிமையாக வடிவமைக்கக் கூடியவர்கள். கடவுளுக்கு அடுத்தபடியாக பெற்றோரை, மாணவர்கள் மதித்து பேண வேண்டும். கல்வி கற்பித்த பள்ளி, கல்லூரி ஆசிரியர்களை மறக்காமல், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

சேவை மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். சோதனைகளையும் சவால்களையும் எதிர்கொண்டால் தான் வெற்றி பெற முடியும். அதற்கு அர்ப்பணிப்பு உணர்வு, தூய்மை, பொறுமை மற்றும் விடா முயற்சி ஆகியவை அவசியமாகும். இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவுக்கான ஒருங்கிணைப்பு பணிகளைக் கல்லூரி இயக்குநர் வெங்கடாசலம், தேர்வு கட்டுப்பாட்டு நெறியாளர் மு.வெங்கடாசலம் ஆகியோர் வழிநடத்தினர். இந்நிகழ்வில், அறக்கட்டளை துணைத்தலைவர் மாணிக்கம்,மற்றும் உறுப்பினர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவ மாணவியர், பெற்றோர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஈரோடு திண்டல் வேளாளர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் நடந்த சாதனையாளர் தின விழாவினை, சென்னை வேக்கன் டெக்னாலஜிஸ் (பி) லிமிடெட் மனிதவள - பொது மேலாளர் சரத்சந்தர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

வேளாளர் பொறியியல் கல்லூரியில் சாதனையாளர் தின விழா நிகழ்ச்சி

■ ஈரோடு

ஈரோடு வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், வேளாளர் கல்வி அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர் தலைமையில் சாதனையாளர் தின விழா நடந்தது.

விழாவில், தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி கே.ஆர். வள்ளுவன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் எம்.ஜெயராமன் கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற சென்னை வேக்கன் டெக்னாலஜிஸ் (பி) லிமிடெட் மனிதவள பொது மேலாளர் சரத்சந்தர் பேசும்போது, சமூக வட்டம் மற்றும் ஆன்லைன் சான்றிதழ் படிப்புகளின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

விழாவில், வேளாளர் அறக்கட்டளை உறுப்பினர் எம்.யுவராஜா, டீன், நிர்வாக மேலாளர் என்.பெரியசாமி, அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

விழாவின் முடிவில், கணினி அறிவியல் பொறியியல் துறையின், பேராசிரியர் மற்றும் தலைவர் எஸ். ஜபீன் பேகம் நன்றியுரை ஆற்றினார்.

வியர்க்குதே

கிச்சிப்பாளையம்

- சேலம் கிச்சிப்பாளையம் துணை மின் நிலையத்தின் பில்லுக்கடை மின் பாதையில் மட்டும் கோடைகால மற்றும் பருவமழை பராமரிப்புப் பணிகள் நாளை (23-ம் தேதி) நடைபெறவுள்ளது. எனவே, மின் நிலையத்துக்கு உட்பட்ட சேலம் எருமாபாளையம் பை-பாஸ் ரோடு, சன்னியாசிகுண்டு, பாத்திமா நகர், பத்திரம் பெருமாள் கார்டன், சிவன் கரடு, அய்யனார் டீ கடை, சாமுண்டி நகர், கோவிந்தசாமி நகர், ஆறுமுக நகர், தாதுபாய்குட்டை, முருககவுண்டர் காடு, சிசி ரோடு, புலிக்குத்தி தெரு 5 மற்றும் 6, சிவனார் தெரு, அசோக்நகர், சங்கர் பிலிம்ஸ் ரோடு, செங்கல்பட்டி தெரு, சிங்காரப்பேட்டை, மாவுமில் ரோடு, பஞ்சந்தாங்கி ஏரி, சாந்தி ஆஸ்பிட்டல் ரோடு, நெய்மண்டி அருணாச்சலம் தெரு, கறிமார்க்கெட், லைன்ரோடு, மாரியம்மன் கோயில் தெரு, மேற்குத் தெரு, ராமகிருஷ்ணா ரோடு, ஆண்டிப்பட்டி ஏரி குடியிருப்பு, அல்லிக்குட்டை காலனி, பிரபாத் பின்புறம் அம்பேத்கர் தெரு, நலாய்தெரு ஆகிய பகுதிகளில் நாளை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்று சேலம் நகரக் கோட்ட மின் வாரிய செயற்பொறியாளர் சுமதி தெரிவித்துள்ளார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:

repsalem@hindutamil.co.in

சென்னிமலை கோயில் மலைப்பாதை விரிவாக்கம் ஆட்சியர் நடவடிக்கை எடுக்க பாஜக கோரிக்கை

■ ஈரோடு

சென்னிமலை முருகன் கோயில் மலைப்பாதை விரிவாக்கப் பணிகளை விரைவாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாஜகவினர் மனு அளித்தனர்.

ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்தில் சென்னிமலை முருகன் கோயில் மலைப்பாதை சீரமைப்பு தொடர்பாக மனு அளித்த பின்னர், ஈரோடு தெற்கு மாவட்ட பாஜக தலைவர் செந்தில்குமார் கூறியதாவது:

சென்னிமலை முருகன் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். பக்குனிஉத்திரம்,சஷ்டிபெருவிழா காலங்களில் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்து வருகிறது. சென்னிமலை முருகன் கோயிலுக்கு படிகள் மூலமாகவும், வாகனம் செல்ல மலைப்பாதை வசதியும் உள்ளது.

அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் வாகனங்களில் வரும் நிலையில், சென்னிமலை மலைப்பாதையை அகலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை இப்பணியை மேற்கொள்வதில், வனத்துறை தரப்பில் ஒப்புதல் கிடைப்பதில் இடையூறு உள்ளது

இதனால், சாலை விரிவாக்க பணிகள் முழுமையாக நடைபெறாத நிலை உள்ளது. எனவே, ஈரோடு ஆட்சியர் இப்பிரச்சினையில் தலையிட்டு, சென்னிமலை மலைப்பாதை விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடந்த மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் ஆட்சியர் ராஜகோபால் சுன்கரா பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றார்.

இதேபோல், தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு சார்பில் ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமையில் பவானி தாலுகா ஓலகடம், கவுந்தப்பாடி, ஜம்பை பகுதியைச் சேர்ந்த 160-க்கும் மேற்பட்ட பெண்கள் பட்டா வழங்கக்கோரி ஆட்சியர் அலுவலகத்தில் மனு வழங்கினர்.

ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடந்த குறைதீர் கூட்டத்தில், வீட்டுமனைப்பட்டா, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மொத்தம் 315 மனுக்களை பொதுமக்கள் அளித்தனர்.

சிறுமலை தோட்டக்கலை பண்ணையில்

மலிவு விலையில் நாட்டுரக பாக்கு கன்றுகள் விற்பனை

விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள அழைப்பு

■ சேலம்

சேலம் அருகே உள்ள சிறுமலை தோட்டக்கலை பண்ணையில்விவசாயிகளுக்கு மலிவு விலையில் நாட்டுரக பாக்கு கன்று உற்பத்தி செய்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் அருநூத்துமலையில் உள்ள சிறுமலையில் தோட்டக்கலைத் துறை சார்பில் தோட்டக்கலை பண்ணை இயங்கி வருகிறது. இங்கு நாட்டு ரக பாக்கு கன்று உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன் பெறும் வகையில் மலிவு விலையில் 70 ஆயிரம் நாட்டு ரக பாக்கு கன்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்பண்ணையில் பாக்கு, மா பக்க ஒட்டு செடிகள், மா குறுந்தண்டு ஒட்டு செடி, நெல்லி ஒட்டு செடி, கொய்யா, குண்டு மல்லி, எலுமிச்சை, பப்பாளி, அழகுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளன. அரசு நிர்ணயித்த விலையின் அடிப்படையில் பாக்கு, எலுமிச்சை, சில்வர் ஓக், மிளகு செடிகள் தலா ரூ.15 விலையிலும், நெல்லி ஒட்டு செடி ரூ.50, மா பக்க ஒட்டு செடி ரூ.80 விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் நேரடியாக சிறுமலை தோட்டக்கலை பண்ணைக்கு சென்று தேவையான செடிகளை வாங்கி பயன்பெறலாம். இதுதொடர்பாக மேலும் விவரங்கள் அறிய விரும்புபவர்கள் தோட்டக்கலைத் துறை அலுவலர் பாஸ்கரை 76397 80782, 96988 83076 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம், என தோட்டக்கலை துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாமக்கல் அறிவுசார் மையத்தில் பயின்ற 44 பேர் அரசுப் பணிக்கு தேர்வு

■ நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 5 அறிவுசார் மையம் மற்றும் நூலகங்களில் பயின்ற 44 பேர் பல்வேறு போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அரசுப் பணிக்குத் தேர்வாகியுள்ளனர்.

இதையொட்டி, அரசுப்பணிக்குத் தேர்வானவர்களுக்கு நாமக்கல் ஆட்சியர் அலுவலகத்தில் பாராட்டு விழா நடந்தது. விழாவுக்கு, ஆட்சியர் ச.உமா தலைமை வகித்துப் பேசியதாவது:

அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுக்கு மாணவ, மாணவிகளை தயார்ப்படுத்தும் வகையில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதியில் அறிவுசார் மையம் மற்றும் நூலகத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன்படி நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், திருச்செங்கோடு, குமாரபாளையம், மோகனூர், பட்டணம் ஆகிய 5 இடங்களில் அறிவுசார் மையம் மற்றும் நூலகம் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நாமக்கல் முல்லை நகர் மாநகராட்சி அறிவு சார் மையம் மற்றும் நூலகத்தில் பயின்ற 16 மாணவ, மாணவிகள் டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், ஒருவர் ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். இதேபோல, திருச்செங்கோடு அறிவுசார் மையத்தில் 17 பேர், குமாரபாளையம் அறிவுசார் மையத்தில் 5 பேரும், பட்டணம் அறிவுசார் மையத்தில் 4 பேர், மோகனூர் அறிவுசார் மையத்தில் 2 பேர் போட்டித்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற 44 பேர் அரசுப் பணிக்குத் தேர்வாகியுள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக, அரசுப் பணிக்குத் தேர்வான 44 பேருக்கும், ஆட்சியர் கேடயம் வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

சமூக பாதுகாப்புத் திட்ட துணை ஆட்சியர் ச.பிரபாகரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பொ.மா.ஷீலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையுடன்

சேலம் நியூரோ ஃபவுண்டேஷன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

■ சேலம்

சேலம் நியூரோ ஃபவுண்டேஷன் மற்றும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் வலிப்பு நோய்க்கான சிறப்பு மையம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி நியூரோ ஃபவுண்டேஷனில் நடைபெற்றது.

இதுகுறித்து சேலம் நியூரோ ஃபவுண்டேஷனில் இயங்கும் முன்னேறிய வலிப்பு மருத்துவ மையத்தின் நரம்பியல் நிபுணர்கள் கூறும்போது, மருந்துகளுக்கு பதிலளிக்காத வலிப்பு நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை ஒரு சிறந்த தீர்வாக உருவெடுத்து வருகிறது, என்றனர்.

இம்மையத்தின் தலைமை நரம்பியல் நிபுணர்கள் டாக்டர் ப்ரீடிஷ் குமார், டாக்டர் நிஷா மொல் "மருந்து செலுத்தியும் நிலைக்காத வலிப்பு நோயாளிகளுக்கு, அறுவை சிகிச்சை ஏற்றதா என்பதை நிரூபிக்கும் முழுமையான மதிப்பீடுகள் அவசியம், என்றனர்.

மேலும் அவர்கள் கூறுகையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இரண்டு மையங்களும் அறிவு பரிமாற்றம், பயிற்சி மற்றும் கூட்டு வழக்கு மதிப்பீடுகளை மேற்கொண்டு வலிப்பு சிகிச்சையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும், என்றனர்.

நியூரோ ஃபவுண்டேஷனில் பணியாற்றும் இளம் நரம்பியல் நிபுணர்கள், நர்ஸ் மற்றும் எலெக்ட்ரோபிசியாலஜி தொழில்நுட்ப நிபுணர்களுக்கு டெல்லி எய்ம்ஸில் சிறப்பு பயிற்சி வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தம் டெல்லி எய்ம்ஸ் முதல் முறையாக மற்றொரு மருத்துவ மனையுடன் இணையும் முயற்சியாகும் எனவும் தெரிவித்தனர்.

சேலம் நியூரோ ஃபவுண்டேஷன் மற்றும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மாவட்ட அளவிலான இலவச விளையாட்டு பயிற்சி முகாமில் பங்கேற்க பதிவு செய்து கொள்ள அழைப்பு

■ சேலம்

சேலம் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான கோடைகால விளையாட்டு இலவச பயிற்சி முகாம் வரும் 25-ம் தேதி முதல் நடைபெறவுள்ளது. பங்கேற்க விரும்புவோர், 25-ம் தேதி காலை 6 மணி முதல் சேலத்தில் உள்ள மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் பிருந்தாதேவி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சேலம் மாவட்டப்பிரிவில் 2025-ம் ஆண்டுக்கான கோடைகால விளையாட்டு பயிற்சி முகாமானது தடகளம், கால்பந்து, கைப்பந்து, கையுந்து பந்து, குத்துச்சண்டை ஆகிய விளையாட்டுகளுக்கு, மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் வரும் 25-ம் தேதி முதல் மே 15-ம் தேதி வரை 21 நாள்களுக்கு காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையிலும் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

கோடைகால பயிற்சி முகாமில் 18 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளலாம். முகாமில் கலந்து கொள்வதற்கு பயிற்சிக் கட்டணம் கிடையாது.

இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் சேலம் மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம். பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்கள் வரும் 25-ம் தேதி காலை 6 மணி முதல் மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், ஆதார் கார்டு நகல் வழங்க வேண்டும். முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் பங்குபெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

sivakumar.v@hindutamil.co.in

சேலத்தில் வயதான தம்பதியை தாக்கி 7 பவுன் நகை பறித்த 2 ரவுடிகள் கைது

■ சேலம்

சேலம் நாராயணன் நகரைச் சேர்ந்தவர் மாதவராஜ் (70). இவரது மனைவி பிரேமா (65). இவர்கள் கடந்த 18-ம் தேதி வீட்டில் தனியாக இருந்தபோது அங்கு வந்த 2 பேர் குடிக்க தண்ணீர் கேட்டுள்ளனர். தண்ணீர் எடுக்க சமையலறைக்கு பிரேமா சென்றபோது, மாதவராஜை தாக்கி ஒரு அறையில் அடைத்து வைத்தனர். பின்னர், தண்ணீருடன் வந்த பிரேமாவை தாக்கி அவரது கழுத்தில் இருந்த 7 பவுன் தங்க சங்கிலி, இரண்டு செல்போன்களை எடுத்துக் கொண்டு 2 பேரும் தப்பினர்.

இதுகுறித்து மாதவராஜ் அளித்த புகாரின் பேரில் கிச்சிப்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, அப்பகுதியில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். இதில், கொள்ளையில் ஈடுபட்டது சேலம் முகமதுபுறா பகுதியைச் சேர்ந்த முஸ்தபா (34), இம்ரான் (34) என்பது தெரியவந்தது. அவர்களை போலீஸார் கைது செய்தனர்.

விசாரணையில், இவர்கள்மீது கொலை வழக்கு நிலுவையில் இருப்பதும், ரவுடிகளான 2 பேரும் வழக்கு செலவுக்காக வயதான தம்பதியை தாக்கி நகையை பறித்ததும் தெரிந்தது. அவர்களிடமிருந்து நகை மற்றும் 2 செல்போன்களை பறிமுதல் செய்த போலீஸார் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
அரங்கத்துறை

அ.து.ந.க. எண். அ3/495/2025

மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம்-4, வார்டு-16ல் ஆண்டார்குப்பம், பர்மா நகரில் இறகு உள்விளையாட்டு திடல் அமைத்தல், மண்டலம்-10, கோட்டம்-140ல் பன்னீர்செல்வம் நகரில் காம்பந்து மைதானம், உடற்பயிற்சி கூடம், மண்டலம்-11, கோட்டம்-153ல் அறிவரசன் சாலையில் உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி & மண்டலம்-14, கோட்டம்-190ல் கண்ணபிரான் கோவில் தெருவில் விளையாட்டு திடலை பழுதுபார்த்தல் & மேம்படுத்தும் பணி

பணியின் உத்தேச மதிப்பு மதிப்பு **ரூ.54.15** இலட்சம் முதல் **ரூ.172.28** இலட்சம் வரை

முன்வைப்பு தொகை: பணியின் மதிப்பில் **1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **08.05.2025** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **09.05.2025** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 1631 / ஒப்பந்தப்புள்ளி / 2025

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் முகவரி : எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **ஆன்லைன் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	20.04.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46038640001118	1) M/s. Kumaran and Co., அதன் பிரதிநிதி உரிமையாளர் திரு. சரவணன் முருகேசன், 2) திரு. சரவணன் முருகேசன், 3) திருமதி. ஜெயந்தி சரவணன்	18-01-2024	23-12-2024	ரூ.77,19,130/- (ரூபாய் எழுபத்தி ஏழு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நூற்றி முப்பது மட்டும்)	30.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.48,41,000/- (ரூபாய் நாற்பத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தி ஓராயிரம் மட்டும்)	ரூ.4,84,100/- (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து நூறு மட்டும்)	06.05.2025 நேரம்: 03.00 PM	05.05.2025, மாலை 5.00 மணி வரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.

பாதுகாப்பு சொத்துக்கள் விவரம் : ஆவணம் எண்.504/2016-ன்படி: 1) சர்வே எண். 94/3சி3பி, 2) வருவாய் பதிவின்படி 94/3சி3பி3, 3) மொத்த பரப்பு 440 3/4 இதில் 220.375 சதுர அடி UDS, 1232 1/2 சதுர அடி, 4) கதவு எண். (சொத்து வரியின்படி) 12-163/ஏ, 5) இடம், கிராமம், சிட்டி, பதிவு, சார் மாவட்டம், இதர, சூரபள்ளி கிராமம், மேட்டூர் தாலுகா, சேலம் மேற்கு பதிவு மாவட்டம், ஜெலகண்டபுரம் SRO, 6) **1) 440 3/4 சதுர நிலம் (பாதை நிலம்) எல்லைகள் : வடக்கு :** 2வது தாக்கு சொத்து, **தெற்கு :** சின்ராஜ் அட்டவணை, **கிழக்கு :** சி-அட்டவணை சந்திரசேகர் சொத்து, **மேற்கு :** நங்கவள்ளி பிரதான சாலை. அளவுகள் விவரம் : வடக்கு-கிழக்கு மேற்கு : 43 அடி, கிழக்கு-தெற்கு வடக்கு : 10 3/4 அடி, தெற்கு-கிழக்கு மேற்கு : 43 அடி, மேற்கு-தெற்கு வடக்கு 9 3/4 அடி. 440 3/4 சதுர அடி. **2) 1232 1/2 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் எல்லைகள் : வடக்கு :** புனிதவள்ளி அட்டவணை நிலம், **தெற்கு :** 1வது தாக்கு நிலம், **கிழக்கு :** சி-அட்டவணை சந்திரசேகர் சொத்து, **மேற்கு :** நங்கவள்ளி பிரதான சாலை. அளவுகள் விவரம் : வடக்கு-கிழக்கு மேற்கு : 43 அடி, கிழக்கு-தெற்கு வடக்கு : 28 1/2 அடி, தெற்கு-கிழக்கு மேற்கு : 43 1/2 அடி, மேற்கு-தெற்கு வடக்கு : 28 1/2 அடி. 1232 1/2 சதுர அடி மற்றும் அனைத்து அடிப்படை உரிமைகள் மற்றும் பாதை.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.** மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளக்கங்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலில் P, (மொபைல் எண். 9884474084), திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849) & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 63622951653)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்து கொள்வது அவசியம். இந்த அ